**ஒருங்கிணைந்த கல்வி, விழுப்புரம் மாவட்டம்**
**முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.க.முனுசாமி, M.A.,M.Sc.,M.BA., B.Ed.,M.Phil.,**

**ந.க.எண்.432/DC-8/ஒக/MDO/2019, நாள்:22.08.2019.**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2019-20 – மாண்புமிகு பாரத பிரதமர் - தொடங்க இருக்கும் Fit India Movement – உறுதிமொழி எடுத்தல் நேரடி ஒளிபரப்பு - மாணவர்கள் பார்ப்பதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் எடுத்தல் – சார்பு.

பார்வை : 1. MHRD அலுவலக நேரடி கடித எண் 12-1/2019/IS-4 நாள்:23.08.2019.
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை – 6 அவர்களின் செயல்முறைகள் ந.க. எண். 2864/ B9 / SS / 2019, நாள்: 26.08.2019.

-------------

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் Fit India Movement என்ற இயக்கத்தை 29.08.2019 அன்று புதுடெல்லியில் காலை 10.00 மணிமுதல் 11.00 மணிவரை துவங்க இருக்கிறார். இத்துவக்க விழாவில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் "Fitness Pledge" உறுதிமொழி எடுப்பதை DD National, DD News மற்றும் DD India ஆகிய தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு செய்ய உள்ளது.

மேற்காணும் பொருள் சார்ந்து பள்ளி அளவில் அனைத்து மாணவர்களும் இவ்வொளிபரப்பை கண்டுகளித்திட ஏற்பாடு செய்யுமாறு அனைத்து வட்டார அலுவலர்கள் மற்றும் அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. தொலைக்காட்சி, மடிக்கணினி, கணினி அல்லது தொடுதிரை தொலைபேசி ஆகிய ஏதேனும் ஊடகத்தை பயன்படுத்தி அனைத்து மாணவர்களும் கண்டிப்பாக இதனை கண்டுகளித்திட வேண்டும்.

மேற்கண்ட வசதிகள் இல்லாத பள்ளிகள் அருகாமையில் உள்ள பள்ளிகளில் இருந்து இவ்வுபகரணங்களை பயன்படுத்திட அறிவுறுத்த வட்டார அலுவலர்களுக்கு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மேற்கண்ட உபகரணங்கள் கிடைக்கப் பெறாமல் இருப்பின், முறையான விளக்க கடிதத்தினை பெற்றுக்கொண்டு உபகரணங்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்திட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தவேண்டும். வாடகைக்கு எடுக்கும் பட்சத்தில், வாடகை செலவினமாக அதிகப்படியாக ரூ.500/- பள்ளிகளுக்கு வட்டார / மாவட்ட செலவினங்கள் தலைப்பில் உபயோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

இப்பணிகளை முடித்து 02.09.2019 - க்குள் அனைத்து வட்டார வளமையங்களும், மாணவர்கள் கண்டுகளித்ததை புகைப்படங்கள் மற்றும் Video - க்களை ஆவண தொகுப்பு செய்து பள்ளி வாரியாக மாவட்ட திட்ட அலுவலகத்தில் CD வடிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதனை முக்கிய பணியாக கருதி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த கல்வி
விழுப்புரம்

பெறுதல் :

1. வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ), அனைத்து ஒன்றியங்கள்.
2. வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றியங்கள்.

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர், விழுப்புரம் / செஞ்சி / திருக்கோவிலூர் / உளுந்தூர்பேட்டை / கள்ளக்குறிச்சி / திண்டிவனம்.

Scanned by CamScanner